2000 என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். நிறைய மணல் தேவைப்பட்டுக் கொண்டிருக்கிறது. செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலேயிருந்துதான் அத்தனை மணலையும் நாம் சென்னைக்குக் கொண்டு வர வேண்டும். அதற்காக அரசாங்கமே டெண்டர் விட்டு மணல் எடுப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் கூறியதற்குத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். மணல் எடுக்கிற உரிமையை அளிக்கின்றபொழுது சில பிரச்சினைகளை நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. மணல் எடுக்கின்ற உரிமையை அளிக்கின்றபொழுது ஒன்று அந்த இடத்தில் விவசாயத்திற்குப் பயன்படுகின்ற நீரூற்றுகள் பாதிக்கப்படுகிறதா என்பதை அறிய வேண்டும். அடுத்து, பக்கத்திலேயிருக்கிற தண்ணீர்த் தொட்டி, பாலம் இதுபோன்ற பகுதிகளிலேயிருந்து சற்றுத்தள்ளியெடுத்தால்தான் அதுபோன்ற தண்ணீர்த் தொட்டிகள், பாலங்கள் எல்லாம் பாதிக்கப்படாது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்கள் கூறிய யோசனையைப்போல அரசு விரைவிலே அதற்குத் தக்க முடிவெடுத்து சட்டபூர்வமான அனுமதியை நாங்கள் வழங்கவிருக்கிறோம். அப்பொழுது இதுபோன்ற பிரச்சினைகள் எழாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 234, திருமதி செ. சுந்தராம்பாள், மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

234–

மேட்டூர் தொகுதி, செக்கானூரில் அருந்ததியர்களுக்குக் குடியிருப்பு வழங்குதல்

***35375–திருமதி செ. சுந்தராம்பாள்:**

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, நவப்பட்டி பஞ்சாயத்து, செக்கனூரில் வனத்துறைக்குச் சொந்தமான இடத்தில் மின்துறையால் தொழிலாளர்களுக்கென்று கட்டப்பட்டு தற்போது காலியாக இருக்கும் 60 குடியிருப்புகளை அருந்ததியர்களுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், செக்கானூர் கிராமத்தை ஒட்டியுள்ள பாலமலைக் காப்புக்காட்டிலுள்ள வன நிலத்தில், கீழ் மேட்டூர் நீர்மின் நிலையத்

1994 ஏப்ரல் 8]

துவக்கப்பணிகளில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களுக்காக தமிழ்நாடு மின் வாரியத்தால் கட்டப்பட்டு, காலியாக இருந்த 30 தற்காலிகக் குடியிருப்புகளை, வீடு மற்றும் நிலமற்ற ஏழை அருந்ததியர்களுக்கு வழங்கும் வகையில் 25-3-94ல் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1979-ஆம் ஆண்டு காவேரியின் குறுக்கே மின்சாரம் எடுப்பதற்காக நான்கு இடங்களில் கதவணைகள் கட்டும் பணி தொடங்கப்பட்டது. அப்பொழுது மேட்டூர் தொகுதி, நவப்பட்டி கிராமம், செக்கானூரில் அங்கு கட்டப்படும் கதவணைகளின் பணிகளுக்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்காக பாலமலையின் அடிவாரத்தில் 60 தற்காலிக வீடுகள் கட்டப்பட்டன. 1991-ஆம் ஆண்டு இந்தக் கதவணைகள் கட்டுமானப் பணிகள் முடிந்தவுடன் மேற்படி 60 வீடுகளில் குடியிருந்த தொழிலாளர்கள் தங்களுடைய வீடுகளைக் காலி செய்து விட்டுச் சென்று விட்டார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த 60 வீடுகளில் 30 மின் துறையால் கட்டப்பட்ட வீடுகளை மேற்படி கிராமத்தைச் சார்ந்த நிலமற்ற, வீடற்ற ஏழை அருந்ததியர்களுக்கு வழங்கப்பட்டு விட்டது என்று கூறியுள்ளார்கள். அதற்காகத் தமிழகத்தின் நிரந்தர முதல்வராக விளங்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். மீதமுள்ள 30 வீடுகளையும் மேற்படி கிராமத்தைச் சேர்ந்த அருந்ததியர்களுக்கு வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் 25-3-94 இல் என்னிடம் கோரிக்கையைக் கொடுத்தார்கள். அன்றே 25-3-94 இல் அதற்கான ஆணையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பிறப்பித்திருக்கிறார்கள். இந்த வீடுகள் என்பது, மின்சாரத் துறையால் கட்டப்பட்டு, மீண்டும் வனத்துறைக்குச் சார்புடையதாக மாற்றப்பட்டு, அவை இடித்துத் தள்ளவேண்டிய வீடுகள். அதன் மூலமாக, மிகுந்த சேதம் அரசுக்கு ஏற்படுமென்று அரசு கருதியது, எனவே, இந்தப் பிரச்சினையை, மனிதாபிமான உணர்வோடு கருதி, அங்கே இருக்கிற ஏழை அருந்ததியர்களுக்கு அவற்றை மாற்றிக் கொடுப்பதற்காக, ஆதிதிராவிடர் நலத் துறைக்கு அந்த வீடுகள் மாற்றப்பட்டிருக்கின்றன. வனப் பகுதியைப் பொறுத்தவரையில், மத்திய அரசினுடைய உத்தரவை எதிர்நோக்கியே, எந்தப் பணியையும் செய்ய

வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இருப்பினும், மனிதாபிமான உணர்வோடு, நிலமற்ற, வீடற்ற ஏழைகளுக்கு, அந்த வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. மைய அரசின் ஒப்புதல், தனியே இதற்குக் கோரப்படும். வன நிலத்திற்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாமல் இருக்க, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீதமுள்ள வீடுகளைப் பற்றி தனியே அறிக்கை பெற்று, பின்னர் முடிவு எடுக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆணையிட்டதன் பேரில், *30* குடும்பங்களுக்கு வீடுகளை அளிக்க, அந்தக் காலனிப் பகுதிக்கு, நமது இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் திருப்பெயரைச் சூட்டியுள்ளோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மத்திய அரசின் ஒப்புதல் பெற்று, அந்த *30* குடும்பங்களுக்குக் கூடிய விரைவில் பட்டா வழங்குவதற்கு, ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் ஒப்புதல் கோரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *235,* திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

235–

தமிழக முன்னாள் முதல்வர் ஓமந்தூர் திரு. இராமசாமி ரெட்டியார் பிறந்தநாளை அரசு விழாவாகக் கொண்டாடுதல்

***13855–திரு ஆ. சுப்புரத்தினம்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் முதல் முதலமைச்சரான ஓமந்தூர் திரு. இராமசாமி ரெட்டியார் அவர்களின் பிறந்த நாள் விழாவை அரசின் சார்பாக ஆண்டுதோறும் கொண்டாட நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.